வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 3516/ஆ4/2024 நாள்: 25.01.2025

பொருள் : தேர்வுகள் –வேலூர் மாவட்டம் –மேல்நிலை முதலாமாண்டு / இரண்டாமாண்டு பொதுத் தேர்வுகள் மார்ச் 2025 –விடுபட்ட / பார்கோடு இல்லாத / சேதமடைந்த முகப்புத்தாட்கள் –அறிவுரைகள் வழங்குதல் –தொடர்பாக.

பார்வை : 1. அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.012861 /எப்2/பி2/2024 நாள் 25.01.2025

===============

நடைபெறவுள்ள மார்ச் 2025 மேல்நிலை முதலாமாண்டு / இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வுகளுக்குரிய முகப்புத் தாட்கள் முதன்மை விடைத்தாட்களுடன் இணைத்து தைக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட தேர்வு மையங்களுக்கு வேலூர், கல்புதூர், அரசுத்தேர்வுகள் உதவி இயக்குநர்கள் வாயிலாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில்,பெறப்படாத முகப்புத்தாட்கள், சேதமடைந்த / பார்கோடு இல்லாத முகப்புத்தாட்களின் விவரங்களை பட்டியலிட்டு, முகப்புத்தாட்களுடன் இணைத்து தைக்கப்பட்ட முதன்மை விடைத்தாட்களுடன் சேர்த்து (சேதமடைந்த / பார்கோடு இல்லாத முகப்புத்தாட்கள் மட்டும்) தேர்வு மைய தலைமை ஆசிரியர்கள் 28.01.2025–க்குள் வேலூர், கல்புதூர், அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட சேதமடைந்த / பார்கோடு இல்லாத முகப்புத்தாட்களுக்கு மாற்றாக புதிய முகப்புத்தாட்களும், பெறப்படாத முகப்புத்தாட்களுக்கு புதிய முகப்புத்தாட்களும் மீளவும் அச்சமுத்தம் செய்யப்பட்டு முதன்மை விடைத்தாட்களுடன் இணைத்து தைக்கப்பட்டு வேலூர், கல்புதூர், அரசுத்தேர்வுகள் உதவி இயக்குநரால் வழங்கப்படும்.

எனவே, அனைத்து தேர்வு மையத் தலைமையாசிரியர்கள் /மெட்ரிக் பள்ளிகளின் முதல்வர்கள் மேற்குறிப்பிட்ட நாட்களுக்குள் தவறாது மாற்று முகப்புத்தாட்கள் கோரப்படும் தேர்வர்களின் விவரப்பட்டியலை அரசுத்தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைத்திட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் மேல்நிலை இரண்டாமாண்டு பெயர்ப்பட்டியலில் நீக்கம் செய்யப்பட்ட (Deletion) முகப்புத்தாட்களை இணைப்பில் காணும் படிவத்தின் படி தேர்வு மைய தலைமை ஆசிரியர்கள் 28.01.2025–க்குள் வேலூர், கல்புதூர், அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

**+2 DELETION TOP SHEET HAND OVER FORMAT**

| S : NO | CENTRE NO | CENTRE NAME | REGISTER NO | SUB 1 | SUB 2 | SUB3 | SUB4 | SUB5 | SUB6 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 246 | | | | | | | | |
| 2 | 246 | | | | | | | | |

குறிப்பு : பெயர்பட்டியலில் (deleted) உள்ள பக்கத்தினை இணைத்து 28.01.2025–க்குள் முகப்புத்தாட்களை அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் கட்டாயம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

//ஓம்.செ.மணிமொழி//
முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர்

பெறுநர்,
அனைத்து வகை மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்,வேலூர் மாவட்டம்.

நகல்

1. வேலூர் மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை/ தனியார் பள்ளிகள்), அவர்களுக்கு தகவலுக்காக தெரிவிக்கலாகிறது.
2. வேலூர்,அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அவர்களுக்கு தகவலின் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது.